*குறிப்புப் பக்கம்*

# தலைக்கு மேலே, சடக்கென பின்பக்கம் எடுத்துச் சென்று, இழுத்து விட்டு அணியும் செயல் முறை வரிசை

புதிய திறமைகளை கற்றுக்கொள்ளும் போது, பெரும்பாலான குழந்தைகளுக்கு உதவி தேவைப்படுகிறது. அந்த வழி முறைகளை சிறிது சிறிதாகப் பிரிப்பதனால், குழந்தை ஒவ்வொரு வழி முறையாக கற்க முடியும். ஒரு குழந்தையைப் பொருத்தே அந்த வழிமுறைகளைப் எத்தனை சிறு பாகங்களாக பிரிப்பது என்பது அமையும்.

உங்களுடைய குழந்தைக்கு ஒரு தொடர் படக்காட்சியை அளிக்க விரும்பலாம். இது அடிப்படையாக, தொடர் சித்திரங்கள் மூலமாக ஒரு பணியை முடிப்பதற்கு எடுக்க வேண்டிய வழிமுறைகளை எடுத்துக் காட்டுவதாகும். நீங்கள் நிஜமான புகைப்படங்களையோ, வரி வடிவங்களையோ, அல்லது படக் குறிப்புகளையோ பயன்படுத்தலாம். படக் காட்சித் தொடரைப் பயன்படுத்தும்போது, உங்களுடைய குழந்தையின் கண் பார்வையில் படும்படியாக அமையுங்கள். அந்தப் படத்தைக் குறிப்பிட்டு அதன் வழி முறைகளை உரக்கப்படித்துக் காட்டுங்கள்.

குழந்தைகளுக்கு அவர்களுடைய கோட் அல்லது மேலங்கியை அணிந்துக்கொள்ள இது ஒரு வேடிக்கையான வழியாகும். அதற்காக கீழ்க்காணும் வழி முறைகளைப் பின்பற்றவும். உங்களுடைய குழந்தைக்கு குனியவோ அல்லது தரையில் உட்காரவோ முடியவில்லையென்றால், தொடர் முறையை ஆரம்பிப்பதற்கு ஒரு தாழ்வான மேஜையின் மீது அந்த கோட்டை வைக்க விரும்பலாம்.

1. கோட் அல்லது மேலங்கியை, தரையின் மீதோ அல்லது மேஜையின் மீதோ வைக்கும்போது அதன் கழுத்துப் பட்டை/ தொப்பி அல்லது சட்டைக் கையையும் தட்டையாக வைக்க வேண்டும். அப்படி, அந்த மேலங்கிக்கு கழுத்துபட்டை/ தலைப்பாகை இல்லையெனில், அதன் லேபிள் தெளிவாகத் தெரியும்படி இருக்க வேண்டும். அந்த லேபிள் சிறியதாக இருந்தால் வண்ணமயமான ஸ்டிக்கரை பொருத்தலாம்.



2. கோட்/மேலங்கி அல்லது லேபிளின் பின்புறம் பார்த்து குழந்தை நிற்பதாக இருக்க வேண்டும்.



3. சட்டைக் கைக்குள், குழந்தை தனது கையை நுழைக்கிறது. நாம் சட்டைக் கையை நேராகப் பிடித்து அந்தக் குழந்தைக்கு உதவலாம்.



4. சடக்! குழந்தை அவனது கையை வெளியே நேராக நீட்டுகிறான்.



5. தொப்! குழந்தை தனது தலைக்கு மேலே கையைத் தூக்குகிறான்.



6. தலைக்கு மேலே! பின்பக்கமாக குழந்தை தனது கையைக் கீழே கொண்டு வருகிறது. இப்போது கோட் அணியப்பட்டு விட்டது. அதை கீழே இறக்குவதற்கு நீங்கள் உதவலாம்.



கோட் சரியாக அணிவதற்கான முதல்படி முக்கியமானதாகும். சரக்கென கையை வெளியே நீட்டி, தலைக்கு மேலிருந்து, பின் வழியாக எடுத்து, இழுத்து விட்டு கோட்/மேலங்கி அணியப்படும் இந்த செயல்முறை வரிசை பழக்கமாகிவிட்ட பிறகு,அவன் தானாகவே கோட் அணிவது எப்படி என்பதைக் காண்பித்துக் கொடுக்கலாம்.